# தமிழ்நாடு தீயணைப்பு - மீட்புப் பணித்துறை

வ.எண் : 29/ 2025

நாள் : 08/08/2025

ந.க.எண்- 311 /2025

## தடையின்மைச் சான்று

பொருள்: தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை - திருப்பூர் மாவட்டம். தாராபுரம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம், நிறுவ / நிறுவப்பட்டுள்ள பள்ளி விடுதிக்கு தடையின்மைச் சான்று வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசு ஆணை எண். 122,பள்ளிக்கல்வி (2) துறைநாள் :14.09.2004.
2. அரசு ஆணை எண். 123,பள்ளிக்கல்வி (2) துறைநாள் :14.09.2004.
3. **தாளாளர், அகரம் பப்ளிக் பள்ளி, என்பவரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் 06.08.2025**

பார்வையில் காணும் அரசினர் ஆணை மற்றும் விண்ணப்பத்தின்படி கதவு இலக்கம் எண்: S.F.NO:122/2,115/2A,கரூர் மெயின் ரோடு, கொளத்துப்பாளையம், தாராபுரம்(T.K) திருப்பூர் (D.T) என்ற முகவரியில் நிறுவ / நிறுவப்பட்டுள்ள அகரம் பப்ளிக் பள்ளி விடுதியினை 07.08.2025 அன்று தாராபுரம் நிலைய அலுவலர் போக்குவரத்து, திரு.ரா.ராஜாஜெயசிம்மராவ் என்பவரால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட கட்டிடத்தில் பள்ளி விடுதி நடத்துவதற்க்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் இது தொடர்பாக தேவையான அனுமதி /தடையின்மை சான்றினை சம்மந்தப்பட்ட உரிமம் வழங்கும் பிறதுறை அதிகாரியிடமிருந்து பெற வேண்டும்.
2. அங்கீகரிக்கப்பட்ட தரமான மினசாதனங்கள்(ISI)சான்று பெற்றவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்
3. கட்டிடத்தின் பரப்பளவில் ஒரு நபருக்கு 120 சதுர அடி வீதம் கணக்கீடு செய்து விடுதியில் சேர்க்க வேண்டும்.
4. இந்திய தேசிய தரக்கட்டுப்பாடு IS2190:2010 ன்படி தீயணைப்புக் கருவிகள் நிறுவப்படவேண்டும்.
5. தீ பாதுகாப்பிற்க்கு வைத்திருக்கும் தீயணைப்பான்களை கால முறையாக மாறுநிரப்பம் செய்து எப்போதும் நல்ல நிலையில் இயங்கக் கூடியதாகக வைத்திருக்க வேண்டும்
6. விடுதியில் பணிபுரியும் அனைவரும் தீயணைப்பான்களை இயக்க தெரிந்திருக்க வேண்டும்.
7. வருடத்திற்கு ஒரு முறை கண்டிப்பாக EVACUTION DRILL நடத்திட வேண்டும்.
8. வெளியேறும் வழி எப்போதும் தடையின்றி இருக்க வேண்டும்.
9. ஹோஸ் ரீல் ஹோஸ் அமைப்பு நிறுவப்பட வேண்டும்
10. இந்த தடையின்மைச் சான்று மூன்று ஆண்டு காலத்திற்கு மட்டும் செல்லத்தக்கது.
11. மேற்கண்ட நிபந்தனைகள் மீறப்பட்டால் இத்தடையின்மை சான்று தானாகவே ரத்தானாதாக கருதப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேதியுடன் கூடிய முத்திரை:

(முத்திரை: தீயணைப்பு - மீட்பு பணிகள் நிலையம், நாள்: 07-08-25)

ரா.ராஜாஜெயசிம்மராவ் 07/08/25
நிலைய அலுவலர்
போக்குவரத்து
தீயணைப்பு – மீட்புப்பணிகள் நிலையம்.
தாராபுரம் – 638656.

பெறுநர்:

அகரம் பப்ளிக் பள்ளி,
S.F.NO:122/2,115/2A, கரூர் மெயின் ரோடு,
கொளத்துப்பாளையம்,தாராபுரம்(T.K)
திருப்பூர் (D.T) 638 661.

நகல்:

மாவட்ட அலுவலர், திருப்பூர் மாவட்டம்.
இணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோவை.
சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அலுவலர்.